# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2042/10 - 2017 ඔක්තෝබර් මස 24 වැනි අඟහරුවාදා - 2017.10.24

*2042/10 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வடக்கு மாகாண மாகாண சபை**

*2017 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வடக்கு மாகாண நிதி (திருத்த) நியதிச் சட்டம்*

வடக்கு மாகாண மாகாண சபையால் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வடக்கு மாகாண நிதி (திருத்த) நியதிச் சட்டத்திற்கு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி சம்மதம் வழங்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

க. தெய்வேந்திரம்,<br>
செயலாளர்,<br>
பேரவைச் செயலகம்,<br>
வடக்கு மாகாணம்.

பேரவைச் செயலகம்,<br>
ஏ 9 வீதி,<br>
கைதடி,<br>
2017, ஒற்றோபர் 17.

**2017 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வடக்கு மாகாண நிதி (திருத்த) நியதிச் சட்டம்**

*2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, வடக்கு மாகாண நிதி நியதிச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு நியதிச் சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடக்கு மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

1. இந்நியதிச் சட்டம் வடக்கு மாகாணத்தின் 2017 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, நிதி (திருத்த) நியதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் வடக்கு மாகாண ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற திகதி தொடக்கம் நடைமுறைக்குவருதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆவது பிரிவைத் திருத்துதல்.*

2. 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, வடக்கு மாகாண நிதி நியதிச் சட்டத்தின் 37 ஆவது பிரிவானது அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.


1A—PG 3731—27 (2017/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*"2 அ. 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் வரையறைக்குள் பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கமொன்றினால் அல்லது அந்தச் சங்கத்திற்காக அல்லது அந்தச் சங்கத்தின் பொருட்டு செய்யப்படும் அசைவற்ற ஆதனங்களின் உரித்துமாற்றம் அல்லது கைமாற்றம்"*

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல்.*

3. இந்நியதிச் சட்டத்தின் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*11- 420*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.